**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.96** **நாள்: 20.07.2016**

## உலக மக்கள் தொகை தின விழா விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் துவக்கி வைத்தார்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

உலக மக்கள் தொகை 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ம் நாள் 500 கோடியை தாண்டிவிட்டது என்ற அபாயத்தை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையிலே ஐக்கிய நாடுகள் சபை அந்நாளை ''உலக மக்கள் தொகை தினம்'' என்று அறிவித்து பெருகி வரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, பொதுமக்கள் விழிப்புணர்வு பெற ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ம் நாள் உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11ம் நாள் உலக மக்கள் தொகை தினம் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை சார்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 19.07.2016 அன்று உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். பின்னர், இந்த விழிப்புணர்வு பேரணியானது ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகையை வந்தடைந்தது.

இப்பேரணியைத் தொடர்ந்து ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகை கலையரங்கில் உலக மக்கள் தொகை தின அனுசரிப்பு விழா பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. இதில், பெருநகர சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும், கல்லூரிகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., பெருநகர சுகாதார அலுவலர்/ கூடுதல் இயக்குநர் டாக்டர். என்.எ. செந்தில்நாதன், பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் டாக்டர். ஷீலா கோபிநாத், பெருநகர கூடுதல் மருத்துவ அலுவலர்/இணை இயக்குநர் டாக்டர். மனோகரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**